**<u>பட்டியல் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்</u>**
**<u>வன்கொடுமைக்கு எதிராக விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், நாமக்கல்</u>**

**முன்னிலை: திருமதி.P.சாந்தி, M.A., L.L.M.,**
**அமர்வு நீதிபதி,**
**சிறப்பு நீதிமன்றம், நாமக்கல்**
**2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ம் நாள் வியாழக்கிழமை**
**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்.16/2021</u>**
**<u>(CNR.No.TNNM12-001563-2021)</u>**

**<u>படிவம் ஏ</u>**

| | | |
|---|---|---|
| 1 | குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் துணை கண்காணிப்பாளர், வேலூர் உட்கோட்டம், ஜேடர்பாளையம் காவல்நிலையம் **குற்ற எண்.581/2020** |
| 2 | **அரசு கூடுதல் வழக்கறிஞர்** | **திரு. V.செல்வராஜூ** |
| 3 | **எதிரிகளியின் பெயர்** | 1. ஜெகநாதன் (35), த/பெ.சின்னுசாமி<br>2. ஜீவானந்தம் (37), த/பெ.ஆறுமுகம்<br>3. சுப்ரமணி (48), த/பெ.ஆறுமுகம்<br>மேற்படியார்களின் முகவரி: வடகரையாத்தூர், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.<br>4. அன்பழகன் (36), த/பெ.பழனிசாமி<br>குமாரசாமிபாளையம், பெரியசோழிபாளையம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம். |
| **4** | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | **திரு.C.முத்துசாமி** |

**<u>படிவம் பி</u>**

| | | | |
|---|---|---|---|
| 5 | சம்பவம் நடந்த நாள் | | 07.10.2020 |
| 6 | புகார் கொடுத்த நாள் | | 08.10.2020 |
| 7 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | | 24.11.2021 |
| 8 | முதல் விசாரணை ஆரம்பித்த தேதி | | குறுக்கு விசாரணை முடிவுற்ற தேதி |
| | அ.சா.1. | 23.02.2022 | 21.04.2022 |
| | அ.சா.2. | 25.03.2022 | 21.04.2022 |
| | அ.சா.3. | 25.03.2022 | 21.04.2022 |

| | | | |
|---|---|---|---|
| | அ.சா.4. | 25.03.2022 | 21.04.2022 |
| | அ.சா.5. | 08.04.2022 | 08.04.2022 |
| | அ.சா.6 | 08.04.2022 | 08.04.2022 |
| | அ.சா.7 | 29.04.2022 | 29.04.2022 |
| | அ.சா.8 | 29.04.2022 | 29.04.2022 |
| | அ.சா.9 | 12.05.2022 | 12.05.2022 |
| | அ.சா.10 | 31.05.2022 | 31.05.2022 |
| | அ.சா.11 | 10.06.2022 | 10.06.2022 |
| | அ.சா.12 | 22.06.2022 | 22.06.2022 |
| | அ.சா.13 | 01.07.2022 | -- |
| | அ.சா.14 | 01.09.2022 | 01.09.2022 |
| | அ.சா.15 | 12.10.2022 | 12.10.2022 |
| | அ.சா.16 | 22.12.2022 | 22.12.2022 |
| | அ.சா.17 | 07.01.2023 | 07.01.2023 |
| 9 | மனுக்களின் விவரம் | இல்லை | |
| 10 | தீர்ப்புரை நாள் | | 06.03.2025 |
| 11 | தீர்ப்புரை நகல் வழங்கப்பட்ட நாள் | | 06.03.2025 |
| 12 | காலதாமதத்திற்கான காரணம் | | -- |

**<u>எதிரிகள் பற்றிய விபரம்</u>**

| எதிரிகள் வரிசை | எதிரிகள் பெயர் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
|---|---|---|---|
| 1 வது எதிரி<br>2 வது எதிரி<br>3 வது எதிரி<br>4 வது எதிரி | 1. ஜெகநாதன்<br>2. ஜீவானந்தம்<br>3. சுப்ரமணி<br>4. அன்பழகன் | | |

| | |
|---|---|
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | இதச பிரிவுகள் 294(b), 341, 325, 324, 506(ii) r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015 |

| | |
|---|---|
| விடுதலை (அ) தண்டனை | **இறுதியாக,** 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 341, 325, 324, 506(ii) r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015–ன் கீழ் முன்வைப்பப்பட்டுள்ள குற்றசம்பவம் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு நல்கி எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 235(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 சுமார் 4 அடி நீளமுள்ள தென்னை மட்டை (2 எண்ணிக்கை) சா.பொ.2 உடைந்த பீர்பாட்டில்–1 ஆகியவற்றை பயனற்றது என கருதி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னரோ அல்லது மேல்முறையீடு இருப்பின் முடிவுற்ற பின்னரோ அழிக்க உத்திரவிடப்படுகிறது. |
| தண்டனை குறித்த விபரம் | இல்லை |
| விசாரணையின் போது எதிரி காவலிலிருந்த நாட்களை குவிமுச 428 பிரிவின் கீழ் கழிக்கப்பட்ட விபரம். | –– |

இவ்வழக்கானது கடந்த 17.02.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த சிறப்பு அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.V.செல்வராஜ௳ அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.முத்துசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**குற்ற அறிக்கையின் சுருக்கம்–**

கடந்த 07.10.2020 அன்று மாலை 02.00 மணியளவில், ஜேடர்பாளையம் காவல்நிலைய எல்லைகுட்பட்ட பாகபாளையம் டாஸ்மார்க் கடையின் பின்புறம் உள்ள மாமரத்து அடியில் மது அருந்தி கொண்டிருக்கும்போது, பட்டியலில் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வகுப்பசை் சாராத 1 முதல் 4 எதிரிகள் பட்டியலில் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த இவ்வழக்கின் வாதி சரவணகுமாரை பார்த்து "நீ யாருடா கீழ் ஜாதியை சேர்ந்த மாவிலன் தேவிடியா பயலே, எங்களை கேக்கற, அப்படிதாண்டா தேவடியா பயலே திட்டுவோம்" என்று வாதியை திட்டியதன் காரணமாக 1 முதல் 4 எதிரிகள் இதச பிரிவு 294(b)–ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக இவ்வழக்கின் வாதி சரவணகுமாரை 1 முதல் 4 எதிரிகள் சட்டவிரோதமாக தடுத்து நிறுத்தியதன் காரணமாக எதிரிகள் இதச பிரிவு 341 r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015–ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 2 மற்றும் 4 எதிரிகள் வாதி சரவணகுமாரை காலால் உதைத்தும், தென்னை மட்டையால் தாக்கி மார்பு மற்றும் இடது வயிற்றிலும் தாக்கியும், இடுப்பில் எலும்பு முறிவை ஏற்படுத்தியதன் காரணமாக 2 மற்றும் 4 எதிரிகள் இதச பிரிவு 325 r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015–ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 முதல் 4 எதிரிகள் வாதி சரவணகுமாரை கையாலும், காலாலும், தலை, இடதுபுற வயிறு, முகத்திலும் மற்றும் தென்னை மட்டை போன்ற அபாயகரமான ஆயுதத்தால் தாக்கி காயத்தை ஏற்படுத்தியதன் காரணமாக 1 முதல் 4 எதிரிகள் இதச பிரிவு 324 r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015–ன் கீழும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 முதல் 4 எதிரிகள் வாதி சரவணகுமாரை பார்த்து பியர் பாட்டிலை உடைத்து காண்பித்து "கீழ் ஜாதியை சேர்ந்த மாவிலன் தேவிடியா பயலே இன்னைக்கு தப்பிச்சிக்கிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம்" என்று குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்ததன் காரணமாக 1

முதல் 4 எதிரிகள் இதச பிரிவு 506(ii) r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** மேற்படி வழக்கானது Spl.S.C.No.16/2021 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு, எதிரிகள் இவ்வழக்கில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், அரசு தரப்பு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக முன்னிடப்படவுள்ள சாட்சிகளையும், ஆவணங்களின் பட்டியலையும் தாக்கல் செய்தபின்னர், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு, எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் வனைய போதிய முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியதால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 341, 325, 324, 506(ii) r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது, எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை மறுத்தனர். வழக்கை விசாரிக்க வேண்டும் என கோரினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3) அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.17 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.21 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் சான்றுப்பொருளாக சா.பொ.1 மற்றும் சா.பொ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. **அரசு தரப்பு சாட்சிகளின் சாராம்சங்கள் சுருக்கம்:-**

i) அ.சா.1 சரவணக்குமார் தான் மீன் பிடிக்கும் தொழில் செய்வதாகவும், தான் தாழ்த்தப்பட்ட மாவுளியன் ஜாதியை சார்ந்தவன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், எதிரிகள் ஜெகநாதன், சுப்பிரமணி, ஜீவானந்தம் ஆகியோர் கவுண்டர் ஜாதியை சேர்ந்தவர்கள் என்றும், அன்பழகன் வன்னியர் ஜாதியை சேர்ந்தவர் என்றும், கடந்த 7.10.2020 ந் தேதியன்று தனது மீன் வலையை காணவில்லை என்று மனஉளைச்சலில் பாதம்பாளையம் மது கடைக்கு தன்னுடைய FZ இருசக்கர வாகனத்தில் பகல் 12.00 மணியளவில் சென்று தான் கடையின் பின்புறம் மாமரத்திற்கு அடியில் தனியாக உட்கார்ந்து மது அருந்தியதாகவும், எதிரிகள் அனைவரும் பக்கத்தில் அமர்ந்து மது அருந்தி கொண்டிருந்தார்கள் என்றும், மது போதையில் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டதால், தான் அவர்களிடம் ஏன் சண்டையிடுகிறீர்கள் என்று கேட்டதற்கு நீ ஏன்டா மாவுளிய தேவடியா பயலே என்று ஜெகநாதன் தன்னை திட்டியதாகவும், பின்னர் ஜெகநாதன் மற்றும் சுப்பிரமணி தன்னை எட்டி தனது இடது அல்லையிலும், நெஞ்சிலும் உதைத்ததால் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், அதன் பின்னர் ஜெகநாதனும், சுப்பிரமணியும் இடது அல்லையிலும், நெஞ்சிலும் தென்னை மட்டையால் அடித்ததாகவும், ஜீவானந்தம், அன்பழகன் ஆகியோர் தன்னை மாறி மாறி நெஞ்சிலும், இடது அல்லையிலும் உதைத்ததாகவும், பக்கத்து ஊரைச் சேர்ந்த பார்த்திபன் விலக்கி விட்டதாகவும், அப்போது நான்கு எதிரிகளும் தன்னை சுற்றி நின்று கொண்டு தன்னை எங்கும் செல்ல விடாமல் செய்தனர் என்றும், பார்த்திபன் தனது வீட்டிற்கு தகவல் சொன்னதாகவும், ஜெகநாதன் பாட்டிலை உடைத்து மாவுளிய தேவடியா பயலே என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறியதாகவும், அதன்பின்னர் 4 பேரும் இரண்டு வண்டிகளில் சென்று விட்டார்கள் என்றும், பின்பு தனது பெற்றோர் வேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்து,

அங்கு தன்னை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தார்கள் என்றும், அப்போது உதவி ஆய்வாளர் சின்னதுரை என்பவர் தன்னை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும், அதை தன்னிடம் படித்து காண்பித்து அது சரியாக இருந்ததால் அதில் தான் கையெழுத்திட்டதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் தென்னை மட்டைகள் தான் தன்னை அடிக்க பயன்படுத்தியதாகவும், அது சா.பொ.1 வரிசை (2 எண்ணிக்கைகள்). என்றும், உடைந்த நிலையில் உள்ள கண்ணாடி பீர் பாட்டிலை காண்பித்து தன்னை மிரட்டினார் என்றும், அது சா.பொ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.16 காவல் உதவி ஆய்வாளர் தான் கடந்த 07.10.2020ம் தேதி ஜேடர்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது வேலூர் அரசு மருத்துவமனையில் சரவணகுமார் த/பெ.தங்கவேல் என்பவர் உள்நோயாளியாக இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று விசாரித்தபோது மேல்சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாக கூறியதன் பேரில் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சரவணகுமார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலைய குற்ற எண்.581/2020 இதச பிரிவுகள் 294(b), 341, 323, 324, 506 (ii) r/w 3(2)(va) SC/ST Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.13 பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் வாக்குமூலத்தையும் உரிய சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இவ்வழக்கு வன்கொடுமை சட்டத்தின் கீழ் விசாரிக்கக்கூடிய வழக்கு என்பதால் காவல் கண்காணிப்பாளருக்கு புலன் விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டி வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வைத்திருந்த வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.17 28.11.2020ம் தேதி அ.சா.1க்கு மருத்துவ சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய நாமக்கல் அரசு

மருத்துவமனை மருத்துவர் அ.சா.14 சிவசுப்ரமணியை விசாரித்து அ.சா.ஆ.10 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.11 காயச்சான்றை பெற்று, வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அங்கப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார்.

iii) அ.சா.17 தான் கடந்த 08.10.2020 அன்று வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது, நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அ.சா.ஆ.14 செயல்முறை ஆணை எண்.19/SJ&HR/Proceedings/2020, dated 08.10.2020 ன்படி வழக்கு கோப்பினை பெற்று புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மதியம் 1.30 மணிக்கு சம்பவ இடமான ஜேடர்பாளையம் காவல் நிலைய சரகம் பாகம்பாளையம் பிராந்திக் கடைக்கு அருகில் அ.சா.7 நாகராஜ், சாட்சி சதீஸ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.15 மாதிரிவரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், அ.சா.4 தங்கவேல், அ.சா.5 பார்த்திபன், அ.சா.7 முருகேசன், அ.சா.1 சரவணகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், 08.10.2020 ம் தேதி மாலை 5.00 மணிக்கு கபிலர் மலை பஸ் நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரிகள் ஜீவானந்தம், சுப்ரமணி, அன்பழகன் ஆகியோர்களை சாட்சிகள் அடையாளம் காட்ட அவர்களை கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், 21.10.2020 ம் தேதி சாட்சிகள் ரவி, ராஜா, சந்திரன், தேவிகா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, வாதி சரவணகுமாருக்கும் எதிரிகள் ஜகநாதன், ஜீவானந்தம், சுப்ரமணி, அன்பழகன் ஆகியோருக்கு சாதி சான்றிதழ் வழங்க வேண்டி பரமத்தி வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவும், 28.10.2020 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சாட்சி சுப்பன், அ.சா.11 மயில் ஆகியோர் எதிரிகள் வாதி சரவணகுமாரை அடிக்க பயன்படுத்திய தென்னை

மட்டை, உடைந்த நிலையில் உள்ள பீர் பாட்டில் ஆகியவற்றை சம்பவ இடத்தில் இருந்து எதிரிகள் மறைத்து வைத்திருந்ததை காட்டியதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய தடயங்களை அ.சா.ஆ.16 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், 05.11.2020 ம் தேதி சம்வத்தை நேரில் கண்ட சாட்சிகளான அ.சா.2 ராஜ், அ.சா.3 ரவி ஆகியோர்களை 164 கு.வி.மு.ச–வின் படி வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டி பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தும், 16.11.2020 ம் தேதி இவ்வழக்கின் தலைமறைவு எதிரி ஜகநாதன் என்பவரை சாட்சி அடையாளம் காட்ட ஜேடர்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்தவரை 11.30 மணிக்கு அவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து ஆனங்கூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.முருகானந்தம் மற்றும் கிராம உதவியாளர் திரு.ஜெகநாதன் ஆகியோர்களை சாட்சியாக வைத்து எதிரி தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.17 ன்படி எதிரி தன்னை கூட்டி சென்றால் எதிரிகள் அடிக்க பயன்படுத்திய தென்னை மட்டையும், பீர்பாட்டிலை வீசிய இடத்தையும் அடையாளம் காட்டுவேன் என்று சொன்னதின்படி எதிரி அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை பார்வையிட்டும் எதிரியை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், அ.சா.10 வீரமணி மற்றும் சாட்சி முருகானந்தம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து,25.11.2020 ம் தேதி அ.சா.2 ராஜ், அ.சா.3 ரவி ஆகியோர்களிடம் கு.வி.மு.ச பிரிவு 164–ன் கீழ் வாக்குமூலம் பெற பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அ.சா.ஆ.18 வேண்டுகோள் கடிதம் அனுப்பியதாகவும், 28.11.2020 ம் தேதி அ.சா.1 க்கு மருத்துவ சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய நாமக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.14 சிவசுப்ரமணியையும், வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அங்கப்பன் என்பவரையும் விசாரித்ததாகவும், வாதிக்கு சாதி சான்றிதழ் அளித்த வட்டாட்சியர்

திருமதி.சுந்தரவள்ளி என்பவரையும், எதிரிகள் ஜெகநாதன், ஜீவானந்தம், ஆகியோருக்கு சாதி சான்றிதழ் வழங்கிய மண்டலதுணை வட்டாட்சியர் திருமதி.கலைவாணி என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 02.12.2020 ம் தேதி எதிரிகள் அன்பழகன், சுப்ரமணிக்கு சாதி சான்றிதழ் அளித்த மண்டல துணை வட்டாட்சியர் திருமதி.கலைவாணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.16 காவல் உதவி ஆய்வாளரை விசாரித்தும், இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 164–ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்த பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களை விசாரித்ததாகவும், சாட்சி ராஜி மற்றும் ரவி ஆகியோரை விசாரித்து பதிவு செய்த கு.வி.மு.ச 164 ன் கீழான வாக்குமூலங்கள் அ.சா.ஆ.19 மற்றும் 20 பெற்றதாகவும், 22.12.2020 ம் தேதி இவ்வழக்கின் இதச பிரிவு 323 ஐ நீக்கம் செய்து சட்டப்பிரிவுகள் 325 r/w 34 இதசவாக சேர்த்து பிரிவு சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.21 தயார் செய்ததாகவும், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 294 (b), 341, 324, 506(ii) IPC r/w 3(2)(va) of SC/ST (POA) Act ல் இருந்து மாற்றம் செய்து 294 (b), 341, 324, 325 r/w 34, 506(ii) IPC r/w 3(2)(va) of SC/ST (POA) Act ஆக இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

iv) அ.சா.2 ராஜ் மற்றும் அ.சா.3 ஆகியோர் இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.4 தங்கவேல், அ.சா.1 சரவணக்குமாரின் தந்தை ஆவார். இவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் பாகம்பாளையம் பிராந்தி கடைக்கு அருகில் சம்பவம் நடந்த இத்திற்கு சென்றபோது அங்கு தனது மகன் அடிபட்டு கிடந்ததாகவும், அருகில் 5 அல்லது 6 நபர்கள் இருந்து வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள், தான் சென்றபோது ஆஜர் எதிரிகள் அங்கு இல்லை என்றும், பின்பு ஆம்புலன்சிற்கு போன் செய்து வேலர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்றதாகவும் கூறியுள்ளார். அ.சா.5 பார்த்தீபன் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தான் பிராந்தி கடைக்கு சென்றபோது கடைக்கு வெளியே சண்டை நடந்து முடிந்திருந்ததாகவும், எதிரிகளை தான் அங்கு பார்க்கவில்லை என்றும், யாருக்குள் சண்டை நடந்தது என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

v) அ.சா.6 ராஜா மற்றும் அ.சா.9 ஆகியோர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது சரவணக்குமார் அடிப்பட்டு மயங்கி கிடந்தார் என்றும், அங்க ரவி, ராஜ், பார்த்தீபன் ஆகியோர்கள் இருந்தனர் என்றும், வேறு நபர்கள் 4 பேர் இருந்தார்கள் என்றும், பின்பு ஆம்புலன்ஸ் வரவழைத்து அ.சா.1 சரவணக்குமாரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு அவரது அப்பாவுடன் அனுப்பி வைத்ததாகவும் கூறியுள்ளனர். அ.சா.7 முருகேசன் அ.சா.1 சரவணக்குமார் தனது அக்கா மகன் என்றும், 07.10.2020 ந் தேதி மதியம் 1.00 மணிக்கு மேல்பாகம்பாளையம் ஒயின்ஷாப் அருகே அ.சா.1 ஐ எதிரிகள் அடித்தவிட்டதாக பார்த்தீபன் தனக்கு போன்மூலம் தகவல் சொன்னதன்படி, தான் தனது மகன் கார்த்திக், தனது மகனின் நண்பர் ஆகியோர் ஒயின்ஷாப் அருகே சென்றபோது அங்கே ரவி, ராஜு, பார்த்தீபன் ஆகியோர் இருந்தனர் என்றும் சரவணக்குமார் அங்கு இல்லை என்றும், ஜீவானந்தம், சுப்ரமணி, ஜகநாதன், அன்பழகன் ஆகியோர் அ.சா.1 ஐ அடித்ததாக பார்த்திபன் சொன்னதாகவும் கூறியுள்ளார்.

vi) அ.சா.8, அ.சா.1 சரவணக்குமார் தனது தம்பி என்றும், 08.10.2020 ந் தேதி மதியம் 1.30 மணியிலிருந்து 2.00 மணிக்குள், தானும் கதீஷ்குமாரும் பாகம்பாளையம் ஒயின்ஷாப்பிற்கு சென்றபோது போலீசார் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது என்றும் கூறியுள்ளார். அ.சா.10 கிராம நிர்வாக அலுவலர், கடந்த 16.11.2020 அன்று பணியில் இருந்தபோது காவல்

நிலையத்திலிருந்து போன் செய்து அடி தடி வழக்கில் ஒருவரை கைது செய்திருப்பதாகவும் அதற்காக சாட்சியாக இருக்க வேண்டுமென்று அழைத்ததன் பேரில் அன்று 11.30 மணியளவில் ஜேடர்பாளையம் காவல் நிலையத்திற்கு தானும், தனது உதவியாளர் முருகனும் சென்றபோது ஜெகநாதன் என்பவரை கைது செய்து தங்கள் முன்பாக விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும் அதில் தாங்கள் சாட்சி கையெழுத்திட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

vii) அ.சா.11 மயில், சுமார் 1 ½ வருடத்திற்கு முன்பாக மல்லாபாளையத்தில் இருந்து ஒயின்ஷாப் வழியாக மட்டை எடுக்க போனபோது ஒயின்ஷாப்பிற்கு மேபுறமாக மாமரத்து அடியில் ஜெகநாதனும், சுப்பிரமணியனும் தென்னை மட்டைகளை எடுத்து கேசவன் கரும்பு காட்டில் வீசினார்கள் அதை தான் பார்த்ததாகவும், சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ல் சா.பொ.1 தென்னை மட்டை, சா.பொ.2 பீர்பாட்டில் தன் முன்பாக கைப்பற்றப்பட்டதாகவும், அதில் தானும், சுப்பன் என்பவரும் கையெழுத்து போட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

viii) அ.சா.12 மருத்துவர் 07.10.2020 ந் தேதி வேலூர் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது மாலை 4.05 மணியளவில் தங்கவேல் என்பவர் அவரது மகன் சரவணக்குமார் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், அவர் 20 பேர் கொண்ட கும்பல் ஒன்று கைகள் மற்றும் கண்ணாடி பாட்டில்கள் மற்றும் மரக்கட்டைகளால் அன்று மதியம் 2.00 மணியளவில் கண்டிப்பாளையம் கழுவங்காடு ஒயின்ஷாப்பில் வைத்து தாக்கியதாக கூறியவரை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார் என்றும், அவரின் மூச்சில் மதுவாடை இருந்ததாகவும், இடது கண்ணை சுற்றி கன்றிய காயமும், வீக்கமும் இருந்ததாகவும், இடது பக்க அல்லையில் எலும்புகள் முறிந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டதால் அவரை மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும், மேற்படி நபருக்கு அ.சா.ஆ.4 விபத்து பதிவேடும்,

காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5 வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார். அ.சா.14 மருத்துவர் 07.10.2020 ந் தேதி நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்தபோது சரவணகுமார் என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வந்தவருக்கு விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 பதிவு செய்து, பரிசோதித்தபோது அவருக்கு இடது பக்க விலா எலும்பு பகுதியில் வலி இருந்ததால் ஸ்கேன் பரிசோதனை செய்தபோது 8 வது விலா எலும்பு முறிந்து நுரையீரலை சுற்றி காற்று புகுந்தது அறியப்பட்டதால் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் அ.சா.ஆ.11 வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

ix) அ.சா.13 வட்டாட்சியர், காவல் துணை கண்காணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில், ஜெகநாதன், ஜீவானந்தம், அன்பழகன், சுப்பிரமணி ஆகியோர்களுக்கு ஜாதி சான்றிதழ்கள் அ.சா.ஆ.6 முதல் 9 வரை வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார். அ.சா.15 வட்டாட்சியர் அ.சா.1 சரவணக்குமாருக்கு ஜாதி சான்றிதழ் அ.சா.ஆ.12 வழங்கியதாக தெரிவித்துள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலுள்ள எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாராம்சங்களை இந்நீதிமன்றம் எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (b) கீழ் வினவியபோது எதிரி பொய்சாட்சி எனவும், சாட்சிகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

7. இருதரப்பு வாதங்கள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவற்றை முழுமையாக பரிசீலனை செய்ததில், அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.4 மருத்துவரிடம் மேற்படி அ.சா.1 சரவணகுமார் அளித்த

வாக்குமூலத்தில் தன்னை 20 நபர்கள் கையாலும், கண்ணாடி பாட்டில்களாலும், மரக்குச்சியாலும் 07.10.2020 அன்று மதியம் 02.00 மணியளவில், கண்டிபாளையம், கலுவங்காடு மதுக்கடை அருகே தாக்கியதாக தெரிவித்துள்ளார். ஆனால் அதே அ.சா.1 தனது புகார் மனுவில் கடந்த 07.10.2020 அன்று பகல் 02.00 மணியளவில் பாகபாளையம் மதுக்கடைக்கு அருகில் தான் மது அருந்தி கொண்டிருக்கும்போது, எதிரிகள் நால்வரும் அவர்களுக்குள் தகராறு செய்துகொண்டிருந்தார்கள் என்றும், மதியம் 02.00 மணியளவில் அந்த சண்டையை தான் விலக்கிவிட்டதாகவும், அப்போது எதிரிகள் தகாத வார்த்தைகளால் தன்னை திட்டியதாகவும், எதிரிகள் அன்பழகன், ஜீவனாந்தம் ஆகியோர் தன்னை காலால் எட்டி உதைத்ததாகவும், அதனால் தான் கீழே விழுந்தபோது எதிரிகள் ஜெகநாதனும், சுப்ரமணியனும் சேர்ந்துகொண்டு அருகில் கிடந்த தென்னை மட்டைகளை எடுத்து மாறி மாறி தனது முகம், கன்னம் மற்றும் இடது பக்க அல்லை பகுதியில் அடித்ததாகவும், எதிரிகள் அன்பழகனும், ஜீவானந்தனும் தன்னை கால்களால் நெஞ்சிலும், இடது பக்க அல்லையிலும் தன்னை மாறி மாறி உதைத்ததாகவும், அந்த நேரத்தில் அங்கிருந்த கண்டிபாளையத்தை சேர்ந்த பார்த்தீபன் என்பவர் சண்டையை விலக்கிவிட்டு தன்னை காப்பாற்றியதாகவும், அங்கிருந்து செல்லும்போது எதிரி ஜெகநாதன் ஒரு பீர்பாட்டிலை உடைத்து இன்னைக்கு தப்பிச்சிக்கிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டிவிட்டு சென்றதாகவும், பார்த்தீபன் தனது குடும்பத்தாருக்கு தகவல் சொல்லி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் தான் வேலூர் மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு, நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தபோது மேற்படி புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக எடுத்துரைத்துள்ளார்.

**8.** அந்த புகார் வாக்குமூலத்தில் மேல் சாதியை சேர்ந்த என்ற வார்த்தைகள் இடைச்செறுகலாக செறுகப்பட்டுள்ளன. மேற்படி புகார் வாக்குமூலத்தை முழுமையாக பரிசீலனை செய்ததில், எதிரிகள் நால்வரும் அ.சா.1ஐ கையாலும், கால்களாலும், தென்னை மட்டையாலும் தாக்கியதாக அ.சா.1 எடுத்துரைத்துள்ளார். மேற்படி புகார் மனுவை பரிசீலனை செய்ததில், வாதி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்ற காரணத்தினால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படவில்லை.

**9.** இந்த சூழ்நிலையில், மேற்படி அ.சா.1 இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்வர் என்ற காரணத்தினால் தாக்கப்பட்டதாக தெரிவிக்கவில்லை. மேற்படி புகாரில் மாவுளிய என்ற சாதியை குறிப்பிட்டு திட்டியதாக அ.சா.1 தெரிவிக்காத நிலையில், தனது சாட்சியத்தில், மாவுளிய தேவடியா பயலே என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எதிரி ஜெகநாதன் திட்டியதாக தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்த வகையிலும், பட்டியலில் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வகுப்பசைச் வகுப்பைச் சார்ந்த வாதி சரவணக்குமாரை எதிரிகள் அனைவரும் பொது இடத்தில் வைத்து அவரது ஜாதி பெயரை சொல்லி திட்டி அவமானப்படுத்தியதன் காரணமாக 3(2)(va) of SC/ST (POA) Amendment Act-ன் கீழான குற்றங்கள் விவரிக்கப்பட்டுள்ள குற்ற செய்கைகளை கவரும் வகையில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.1 புகாரோ, அ.சா.1ன் சாட்சியமோ அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.** இந்தசூழ்நிலையில், அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் குறித்து இந்நீதிமன்றம் தெளிவாக பரிசீலனை செய்ததில், அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 புகார் ஆகியவற்றை ஆகியவற்றை முழுமையாக பரிசீலனை செய்ததில், பார்த்தீபன் என்ற நபர் சம்பவத்தின்போது உடனிருந்ததாகவும், அவரே கண்ணுற்ற சாட்சி

என்றும் அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி பார்த்தீபன் இந்நீதிமன்றத்தில் விசாரணைசெய்தபோது அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 புகார்தாரரான சரவணகுமாரும் சம்பவ சமயத்தில் மதுவின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளார் என்பது அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வாயிலாகவும், அ.சா.ஆ.1 புகார் மற்றும் அ.சா.1ன் சாட்சியத்தின் வாயிலாகவும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**11.** அ.சா.4, அ.சா.1ன் தந்தையான தங்கவேல் தனது சாட்சியத்தில், மேற்படி சம்பவம் குறித்து அ.சா.5 பார்த்தீபன் தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். அ.சா.1 ஆன சரவணகுமாரும் தனது புகாரில் சம்பவ இடத்தில் அ.சா.5 பார்த்தீபன் சம்பவத்தை கண்ணுற்றதாக தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.5 இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

**12.** அதே சமயத்தில் அ.சா.2 ராஜ் மற்றும் அ.சா.3 ரவி ஆகிய சாட்சிகள், தங்களது சாட்சியங்களில், தாங்கள் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவத்தை கண்ணுற்றதாகவும், அ.சா.2 தான் தான் அ.சா.4 தங்கவேலுக்கு தகவல் அளித்ததாகவும் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி சாட்சியத்தினை முழுமையாக பரிசீலனை செய்ததில், அ.சா.2 மற்றும் 3 ஆகியோர் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகின்றது. ஏனெனில், அ.சா.2 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில், சம்பவத்தின்போது தான் ஆனங்கூர் சமாதிமேட்டிலிருந்து கிழக்கு திசை நோக்கி மீன் விற்க சென்றதாகவும், மீன் விற்க போகும்போது மதியம் 2.00 மணி இருக்கும் என்றும், பாமாகவுண்டன்மேட்டிற்கு மீன் விற்க சென்றதாகவும், மேற்படி பாமாகவுண்டன்மேடு சம்பவ இடத்திலிருந்து 200 மீட்டர் இருக்கும் என்று தெரிவித்துள்ளார். மேலும் சம்பவ இடமானது பாமாகவுண்டன்மேட்டில் உள்ளதாக

தெரிவித்துள்ளார். ஆனால் அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கை மற்றும் அ.சா.ஆ.2 பார்வை மகஜர், அ.சா.ஆ.15 மாதிரி வரைபடம் ஆகியவற்றில் சம்பவ இடமானது பாகபாளையம் ஒயின்ஷாப் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.3 அன்றையதினம் அ.சா.2 உடன் சென்றதாக தெரிவித்துள்ளார். சம்பவ சமயத்தில் அ.சா.3 கண்டிப்பாளையத்திலிருந்து பிராந்தி கடை வழியாக குமாரசாமிபாளையம் மீன் விற்க சென்றதாக தெரிவித்துள்ளார். குமாரசாமிபாளையம், பாகம்பாளையத்திலிருந்து 3 கி.மீ. அல்லது 4.கி.மீ. தொலைவில் இருக்கும் என்றும், மண் தடத்தில் சென்றபோது சத்தம் கேட்டது என்றும், அங்கு 10 நபர்கள் இருந்தார்கள் என்றும் தான் சென்றுபார்த்தபோது சண்டை நடந்து கொண்டிருந்தது என்றும், 10 நபர்கள் யாரென்று தனக்கு தெரியாது என்றும், தான் சென்றபோது சரவணகுமார் அங்கு இருந்ததாகவும், சரவணகுமார் மதுபோதையில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்களின் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில், மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3 சம்பவ இடத்தில், சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட சமயத்தில் இருந்தது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகின்றது.

**13.** இந்த வழக்கில் 2 முதல் 4 எதிரிகள் 08.10.2020 அன்று விசாரணை அதிகாரியால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் சா.பொ.1 மற்றும் 2 சான்றுப்பொருட்களானது 28.10.2020 அன்று சுப்பன் மற்றும் மயில் ஆகிய சாட்சிகளின் முன்னிலையில் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி சுப்பன் மற்றும் மயில் ஆகியோர்களுக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாத நிலையில், அவர்களது முன்னிலையில் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அல்லாமல் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் தென்னை மட்டை மற்றும் பீர் பாட்டில் ஆகியவை மேற்படி சுப்பன் மற்றும் மயில் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி சுப்பன் மற்றும் மயில் ஆகியோர் சம்பவத்தை

கண்ணுற்ற சாட்சிகள் இல்லையென்று விசாரணை அதிகாரி ஒப்புக்கொண்டுள்ள நிலையில், சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சான்றுப்பொருட்களை சுப்பன் மற்றும் மயில் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகின்றது.

**14.** மேற்படி 2 முதல் 4 எதிரிகள் 08.10.2020 அன்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மூலமாக சா.பொ.1 மற்றும் 2 கைப்பற்றப்படவில்லை. ஆனால் மேற்படி சா.பொ.1 மற்றும் 2 சம்பவம் குறித்து எதுவும் தெரியாத மூன்றாம் நபர்களான சுப்பன் மற்றும் மயில் ஆகியோர்கள்முன்னிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி சா.பொ.1 மற்றும் 2 சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாக விசாரணை அதிகாரி தனது சாட்சியத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் தெரிவித்துள்ள நிலையில், 2 முதல் 4 எதிரிகள் கைது செய்யப்பட்ட அன்றே அந்த சான்றுப்பொருட்கள் கைப்பற்றப்படாதது ஏன் என்ற இந்நீதிமன்ற கேள்விக்கு அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் இல்லை.

**15.** இந்த வழக்கின் 1வது எதிரி ஜெகநாதன் என்பவரை 16.11.2020 அன்று சாட்சிகள் அடையாளம் காட்ட ஜேடர்பாளையம் பேருந்து நிறுத்தத்திற்கு அருகே நின்றுகொண்டிருந்தவரை 11.30 மணிக்கு கைது செய்ததாக மேற்படி விசாரணை அதிகாரி அ.சா.17 தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி விசாரணை அதிகாரி அ.சா.17 1வது எதிரியை கைது செய்தபோது கிராம நிர்வாக அலுவலர் முருகானந்தம் மற்றும் கிராம உதவியாளர் ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னை அழைத்துச் சென்றால் வாதியை அடிக்க பயன்படுத்திய தென்னை மட்டையையும் பீர் பாட்டிலை வீசிய இடத்தையும் அடையாளம் காட்டுவேன் என்று சொன்னதாக தெரிவித்துள்ளார். ஆனால் 28.10.2020 அன்று சுப்பன் மற்றும் மயில் ஆகியோர்கள்

முன்னிலையில் மேற்படி வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் வழக்கின் புகாரானது மேற்படி பட்டியலில் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு இழைத்த குற்றச்சாட்டின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள குற்ற செய்கையின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வழக்கின் புகாரான அ.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டு மேற்படி அ.சா.1 க்கு குடிபோதையில் கீழே விழுந்து அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஏற்றவாறு வழக்குச் சொத்துக்கள் அ.சா.17 விசாரணை அதிகாரியால் தயார் செய்யப்பட்டுள்ளது என்ற எதிரிகள் தரப்பு வாதத்தில் நியாயம் இருப்பதாகவும், அதனை ஒதுக்குவதற்கு இல்லை என்றும் இந்த நீதிமன்றம் கருதுகின்றது. புகார் மற்றும் காயச்சான்றிதழுக்கு ஏற்றவாறு வழக்குச் சொத்துக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன என்ற எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையின்போது எழுப்பப்பட்ட கட்சியும், எதிரிகள் தரப்பு வாதத்திலும் நியாயம் இருப்பதாகவும், அதனை ஒதுக்குவதற்கு இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**16.** மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1 தனது புகாரில் அ.சா.5 பார்த்தீபனை மட்டுமே குறிப்பிட்டுள்ள நிலையில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை அதிகாரியால் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் 24.11.2020 அன்று பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தப்பட்டுள்ளார்கள். மேற்படி இரண்டு சாட்சிகளும் சம்பவத்தை கண்ணுற்றதாக மேற்படி பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். இருந்தபோதிலும் சம்பவமானது 07.10.2020 அன்று நடைபெற்றுள்ள நிலையில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1 தனது புகாரில் பார்த்தீபன் என்ற நபரை குறிப்பிட்டுள்ள நிலையில், அந்த பார்த்தீபன்தான் தனது தந்தையான தங்கவேல் என்பவருக்கு தகவல் சொன்னதாக அ.சா.1 தனது புகாரில் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி அ.சா.4 தங்கவேல் தனது சாட்சியத்தில், தனக்கு பார்த்தீபன் என்பவர் சம்பவம் குறித்து தகவல் சொன்னதாக தெரிவித்துள்ளார். இந்த சூழ்நிலையில், சம்பவ இடத்தில் அ.சா.2 மற்றும் அ.சா.3 ராஜ் மற்றும் ரவி ஆகியோர்கள் இருந்தார்கள் என்பது எந்த அடிப்படையில் விசாரணை அதிகாரிக்கு தெரியவந்தது என்பது குறித்தோ, மேற்படி சாட்சிகள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக இருந்திருந்தால், அவர்களை 07.10.2020 அன்று சம்பவம் நடைபெற்றுள்ள சூழ்நிலையில், 25.11.2020 அன்று பரமத்தி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் முன்பாக குவிமுச பிரிவு 164–ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்கோள் கடிதம் கொடுக்க வேண்டிய அவசியம் என்னவந்தது என்ற கேள்விக்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் இல்லை.

**17**. சம்பவமானது 07.10.2020 அன்று நடைபெற்றுள்ள நிலையில் 2 முதல் 4 எதிரிகள் 08.10.2020 அன்று கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், வழக்குச் சொத்துக்கள் சம்பவ இடத்திலிருந்து மூன்றாம் நபர்களான சுப்பன் மற்றும் மயில் ஆகியோர்கள் முன்னிலையில் 28.10.2020 அன்று கைப்பற்றப்பட்டுள்ளன என்ற விசாரணை அதிகாரியின் சாட்சியத்தில் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகின்றன. மேற்படி சா.பொ.1 மற்றும் 2 ஆகியவற்றை சுப்பன் மற்றும் மயில் ஆகியோர் எவ்வாறு அடையாளம் கண்டு அந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்ற கேள்விக்கு விசாரணை அதிகாரியான அ.சா.17 மறுநாள் எதிரிகள் கேசவன் காட்டில் மேற்படி தென்னை மட்டைகளையும், உடைந்த பீர் பாட்டிலையும் தூக்கிவீசும்போது தான் கண்டதாகவும், சரவணகுமார் காயம்பட்ட விவரம் தெரிந்துகொண்டதன் அடிப்படையில், சுப்பன் மேற்படி சான்றுப் பொருட்களை அடையாளம் காட்டியதாக இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்த போதிலும், அ.சா.1 புகாரில் மேற்படி பட்டியலில் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு இழைத்த வன்கொடுமை சட்டத்தின் கீழ் இவ்வழக்கானது விசாரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மேல் சாதியை

சேர்ந்த என்ற வாசகம் இடை செறுகலாக சேர்க்கப்பட்டு பொய்யாக ஒரு புகார் தயார் செய்யப்பட்டு, அ.சா.1 க்கு குடிபோதையில் ஏற்பட்ட காயங்களுக்கு ஏற்றவாறு வழக்குச் சொத்துக்கள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் தயார் செய்யப்பட்டுள்ளார்கள் என்ற எதிரிகள் தரப்பு வாதத்தில் நியாயம் இருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**18.** சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் இருந்துள்ள நிலையில், அவர்களது வாக்குமூலங்களை சம்பவம் நடைபெற்று 45 நாட்களுக்கு பிறகு, பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு முன்பு மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களை குவிமுச பிரிவு 164–ன் கீழ் பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏன்? வந்தது என்ற கேள்விக்கு அரசு தரப்பிலிருந்து எந்த விளக்கமும் இல்லை. சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவை இந்த வழக்கிற்கு எவ்விதத்திலும் சம்மந்தப்படாத மூன்றாம் நபர்களான சுப்பன் மற்றும் மயில் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்துள்ள சங்கதியில் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகின்றது.

**19.** இவ்வழக்குச் சம்பவம் நடைபெற்றது உண்மையானால், 2 முதல் 4 எதிரிகளை 08.10.2020 அன்று கைது செய்து விசாரிக்கும்போது அவர்கள் மூலமாக மேற்படி சான்றுப்பொருட்கள் ஏன் கைப்பற்றப்படவில்லை என்ற கேள்விக்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் இல்லை. இந்நிலையில் விசாரணை அதிகாரியான அ.சா.17 இவ்வழக்கை சரிவரி புலன்விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. புகாரானது வழக்கிற்கு ஏற்றவாறு புகாரில் மேல் சாதியை சேர்ந்த என்ற வாசகம் இடைச்செறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும், அ.சா.1–க்கு குடிபோதையில் ஏற்பட்ட காயங்களுக்கு ஏற்றவாறு சாட்சிகளும், சான்றுப்பொருட்களும் தயார்

செய்யப்பட்டுள்ளன என்ற எதிரிகள் தரப்பு வாதத்தில் நியாயம் இருப்பதாகவும், அதனை ஒதுக்குவதற்கு இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்படி சா.பொ.1 மற்றும் சா.பொ.2 மேற்படி சுப்பன் மற்றும் அ.சா.11 மயில் ஆகியோரின் சாட்சியங்கள் மற்றும் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் குறுக்குவிசாரணை சாட்சியம் மற்றும் அ.சா.1 மருத்துவரிடம் சம்பவ இடம் குறித்து தவறுதலாகவும், தன்னை 20 நபர்கள் தாக்கியதாக தெரிவித்ததையும் ஆகிய இவை அனைத்தையும் ஒருங்கே பரிசீலிக்கையில் அரசு தரப்பில், எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கையில் முன் வைத்த குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு நல்கி எதிரிகளை இந்த குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**20. இறுதியாக,** 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 341, 325, 324, 506(ii) r/w 3(2)(va) of SC/ST (POA) Amendment Act 2015–ன் கீழ் முன்வைப்பப்பட்டுள்ள குற்றசம்பவம் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு நல்கி எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 235(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 சுமார் 4 அடி நீளமுள்ள தென்னை மட்டை (2 எண்ணிக்கை) சா.பொ.2 உடைந்த பீர்பாட்டில்–1 ஆகியவற்றை பயனற்றது என கருதி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னரோ அல்லது மேல்முறையீடு இருப்பின் முடிவுற்ற பின்னரோ அழிக்க உத்திரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

P SHANTHI Digitally signed by P SHANTHI Date: 2025.03.06 18:13:03 +1200

அமர்வு நீதிபதி,
நாமக்கல்.

**அரசு தரப்பு சாட்சிகளின் பட்டியல்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.சரவணக்குமார் |
| அ.சா.2 | திரு.ராஜ் |
| அ.சா.3 | திரு.ரவி |
| அ.சா.4 | திரு.தங்கவேல் |
| அ.சா.5 | திரு.பார்த்தீபன் |
| அ.சா.6 | திரு.ராஜா |
| அ.சா.7 | திரு.முருகேசன் |
| அ.சா.8 | திரு.நாகராஜ் |
| அ.சா.9 | திரு.சந்திரன் |
| அ.சா.10 | திரு.வீரமணி (கிராம நிர்வாக அலுவலர்) |
| அ.சா.11 | திரு.மயில் |
| அ.சா.12 | மருத்துவர்.திரு.அங்கப்பன் |
| அ.சா.13 | கலைவாணி (வட்டாட்சியர்) |
| அ.சா.14 | மருத்துவர் திரு.சிவசுப்ரமணியம் |
| அ.சா.15 | சுந்தரவள்ளி (வட்டாட்சியர்) |
| அ.சா.16 | திரு.சின்துரை (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.17 | திரு.ராஜாரணவீரன் (காவல் துணை கண்காணிப்பாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.10.2020 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 08.10.2020 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 28.10.2020 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.4 | 07.10.2020 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.5 | 07.10.2020 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.6 | 27.11.2020 | ஜெகநாதன் என்பவருக்கு வழங்கிய ஜாதிச் சான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | 27.11.2020 | ஜீவானந்தம் என்பவருக்கு வழங்கிய ஜாதிச் சான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | 02.12.2020 | அன்பழகன் என்பவருக்கு வழங்கிய ஜாதிச் சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | 02.12.2020 | சுப்ரமணி என்பவருக்கு வழங்கிய ஜாதிச் சான்றிதழ் |
| அ.சா.ஆ.10 | 07.10.2020 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.11 | 26.11.2020 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.12 | 19.11.2020 | சரவணக்குமாருக்கு வழங்கிய ஜாதிச் சான்றிதழ் |
| அ.சா.ஆ.13 | 08.10.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.14 | 08.10.2020 | மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை எண்.19/SJ & HR/Proceedings/2020 |
| அ.சா.ஆ.15 | 08.10.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.16 | 28.10.2020= | படிவம் 91 |
| அ.சா.ஆ.17 | 16.11.2020 | 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.18 | 05.11.2020 | வேண்டுகோள் கடிதம் |
| அ.சா.ஆ.19 | 24.11.2020 | குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலம் (ராஜ்) |
| அ.சா.ஆ.20 | 24.11.2020 | குவிமுச பிரிவு 164–ன் கீழான வாக்குமூலம் (ரவி) |
| அ.சா.ஆ.21 | 22.12.2020 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்கள்**

சா.பொ.1 – சுமார் 4 அடி நீளமுள்ள தென்னை மட்டை ( 2 எண்ணிக்கை)

சா.பொ.2 – உடைந்த பீர்பாட்டில் –1

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை.

P SHANTHI

Digitally signed by P SHANTHI
Date: 2025.03.06 18:12:02 +1200

அமர்வு நீதிபதி,
பட்டியல் கண்ட ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்
வன்கொடுமைக்கு எதிராக விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம்,
நாமக்கல்.